மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, சடையமங்கலத்தில் கட்டி முடித்துச் செயல்படாமல் இருந்துவரும் கால்நடைக் கிளை நிலையத்தில், கால்நடை மருத்துவரை நியமனம் செய்து, அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை உடனடியாக செயல்படச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: கால்நடை மருத்துவ நிலையம் என்பது கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்தது. இருந்தாலும், பால் வளத் துறையின் சார்பாக கால்நடைகளைப் பராமரிப்பதற்காக நடமாடும் மருத்துவ மையம் அமைத்து, மருத்துவரை நியமித்து, அதன் மூலமாகக் கால்நடைகளைப் பராமரித்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

113—

இணைப்புக் கால்வாய்

***6531—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, பாப்பாரப்பட்டியிலுள்ள ஆற்று மேம்பாலம் அருகில் தடுப்பணை கட்டி, பாப்பாரப்பட்டி ஏரிக்கு இணைப்புக் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2013 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊத்தங்கரை தொகுதி, பாப்பாரப்பட்டியிலுள்ள ஆற்று மேம்பாலம் அருகில் தடுப்பணை கட்டி, பாப்பாரப்பட்டி ஏரிக்கு இணைப்புக் கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே கேள்வி எழுப்பியுள்ளார். ஆற்றின் மட்ட அளவைவிட ஏரியின் மட்ட அளவு 6 மீட்டர் உயரமான இடத்தில் அமைந்துள்ளதால், அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டுவர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். என்னுடைய ஊத்தங்கரை தொகுதியில், பாப்பாரப்பட்டி ஏரிக்கு இணைப்புக் கால்வாயினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்தால், 600 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும். அங்கே 4 ஊராட்சிகள் உள்ளன; 20 ஆயிரம் மக்கள் இதன்மூலம் பயன்பெறுவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த வகையிலாவது மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, இந்த இணைப்புக் கால்வாயினை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரியின் மட்டம், ஆற்றின் மட்ட அளவைவிட 6 மீட்டர் உயரமாக உள்ளது. வேண்டுமானால், தடுப்பணை கட்டுவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், அந்த ஏரிக்கு நீர் வருவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கிறது; எனவே, அதற்குச் சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பணை கட்டித் தர ஆவன செய்வதாக தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

கால்நடைக் கிளை நிலையம்

***11725—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நாகம்மநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நாகம்மநாயக்கன்பட்டியைச் சேர்ந்த கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறையின் விதிகளுக்குட்பட்டு, 3,000 கால்நடைகளுக்கு மேல் இருப்பதால், அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதுமில்லை' என்ற அப்பர் பெருமானின் பொன்மொழிக்கேற்ப, எதற்கும் அஞ்சாமை, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட*